Registered No. M. 2830 "SIDDHANTHAM"

Vol. 41 — No. 10

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 41 | கீலக ஐப்பசி 1968 அக்டோபர் | இதழ் 1

உள்ளுறை பக்கம்

தீயவருக்கும் தேறுதல் ...	281
திருக்கலிக்காமூர் ...	286
திருக்குறளில் பிறப்புண்மை ...	288
காந்தி அடிகளின் நாமம் வாழ்க ...	294
தூதுவிட்ட தொண்டர் ...	297
தமிழ்க் தெய்வம் ...	303
ஞான பூசா விதி ...	309
மதிப்புரை ...	311

இதழாசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,

துணையிதழாசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குருநாத முதலி தெருவிலுள்ள சமாஜ அலுவலகத்தில் 27—10—68 ஞாயிற்றுக்கிழமை காலை 9–30 மணிக்குச் சமாஜச் செயற்குழுக்கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவு கணக்கு, ஆண்டுவிழா, பிற இன்றியமையாச் செய்திகள் பற்றி முடிவெடுக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவருது வந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர்.

(செயலாளர்)

நம் சமாஜச் சார்பில் 20–9–68 மாலை 7 மணிக்குத் திருமயிலைக் கபாலீச்சுரத்தில் அருணந்தி சிவாச்சாரியார் திருநாள் நிகழ்ந்தது. சமாஜத் தலைவர் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளையவர்கள் ''அருணந்தி சிவம்'' எனும் பொருள்பற்றி விரிவுரையாற்றினுர்கள்.

22–9–68 ஞாயிறன்று கூடிய சமாஜச் செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்காணும் முடிவுகள் நிறைவேற்றப்பெற்றன. அவை வருமாறு:—

(1) திரு. V. K. C. நடராசன் (I.A.S.) அவர்கள் மறைவு குறித்து சமாஜம் வருந்துகிறது. அவர்கள் குடும்பத்தினருக்கு சமாஜம் தம் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவர்கள் ஆன்மா இறைவனிணையடியிலின்புற்றிருக்க அவனருள் பாலிக்கப் பெம்மானருளையே வேண்டி வழுத்துகிறது.

(2) சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்களும் தமிழக முதலமைச்சர் திரு. C. N. அண்ணுதுரை அவர்களும் தங்கள் நோய் நீங்கி உடல் நலம் பெற்றிலங்க எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிக்க வேண்டி பெம்மானருளையே நாடி சமாஜம் வணங்குகிறது.

(3) 20–10–1968 அன்று மெய்கண்டார் திருநாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடவேண்டுமென்றும் அதற்கென ஓர் உட்குழு நியமிப்பதென்றும் முடிவு செய்யப்பெற்றது. உட்குழு உறுப்பினர்கள் வருமாறு:—

வித்துவான் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை I. A. S. (ஓய்வு)

திரு. நே. சு. கிருஷ்ணசாமி M. A., B. T.

வித்துவான் அம்பை. இரா. சங்கரனுர்

திரு. கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டியார்

திரு. C. N. சிங்காரவேல் முதலியார் எம். ஏ.

திரு. சி. வடிவேல் பிள்ளை பி. ஏ., பி. டி.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 41	கீலக ஹூ ஐப்பசி 1968 அக்டோபர்	இதழ் 10

தீயவருக்கும் தேறுதல்

(ஆசிரியர்)

திருவைந்தெழுத்தின் பொருள், அதை ஓதும் முறை ஓதுவதற்கு அதிகாரியாவார். முதலான சிறப்பான பல பொருள்களை உண்மை விளக்கம், சதாசிவ ரூபம் போன்ற சாத்திரங்கள் தெளிவாகவும் அனுபவ பூர்வமாகவும் கூறும். "பாசம் ஒருவ, தண்ணிழலாம் பதி; விதி எண்ணும் அஞ் செழுத்தே" என்பது சிவஞான போதம், ஒன்பதாம் சூத்திரம்: "பதிஞானமானது பிறவித் துன்பமாகிய வெப்பத்தைத் தவிர்க்கவல்ல குளிர்ந்த நிழலாய் விளங்கும். இவ்வாறு அனுபவிக்கும் காட்சி சலியாமைப் பொருட்டு, இக் காட்சியை அளிக்கவல்ல திருவைந்தெழுத்தை விதிப்படி தியானிக்க; தியானித்தல் என்பது குருவினிடம் உபதேசம் பெற்று ஓதுதல்; பரம்பொருளே குருவாக வருகிருன்—இவையே சைவ மரபு.

சிவ சின்னங்கள் மூன்று; உருத்திராக்கம், திருநீறு, ஐந்தெழுத்து என்பன. உருத்திராக்கம் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது; தனிப்பதிகமில்லை. திருநீற்றுக்கு ஒரு தனிப்பதிகம் சம்பந்தர் பாடினுர். திருவைந்தெழுத்துக்கு நான்கு தேவாரப் பதிகங்கள் உள்ளன.

இறைவன் திருநாமத்தை ஓதுவதை எல்லாச் சமயங் களும் மிகவும் விதந்து கூறுகின்றன. நம் திருமுறைகள் தோறும் இதன் சிறப்பைக் காணலாம். திருவைந்தெழுத் தின் சிறப்பைக் கூறும் இரு பதிகங்களைச் சம்பந்தர் பாடி யுள்ளார், அப்பரும் சுந்தரரும் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ள னர்.

ஒரு கருத்தை மட்டும் இங்கு கூற விரும்புகிறோம். அறி வில்லாதவராயினும் அவர் திருவைந்தெழுத்தை ஓதி உணர் வாராயின், அவர் உள்ளத்தில் பெருமான் எழுந்தருளி வந்து அருள் செய்வான் என்பது அப்பர் திருவாக்கு.

ஏதும் ஒன்றும் அறிவில ராயினும்
ஓதி ஐந்தெழுத் தும்உணர் வார்கட்குப்
பேதமின்றி அவரவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர் மாற்பேறரே.

என்பது காண்க. இனி மற்றொரு பாடல் நற்குணம் படை யாதவரைக் குறிப்பிடுகிறது.

கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்;
நல்லார் நாமம் நமச்சிவாயவே (3324)

என்ற சம்பந்தர் திருவாக்கையும், பிறவற்றையும் கருதுக. கொலைத் தொழில் புரிபவராயினும், நற்குணமில்லாதவராயி னும் இறைவனது திருவைந்தெழுத்தைச் சொல்லுவாராளுல் அப்புண்ணிய விசேடத்தால் எல்லாத் தீங்கிலிருந்தும் விலகி விடுவர் என்று இப்பாசுரம் கூறுகிறது.

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும்ப கர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே (3325)

நரகம் ஏழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயின் உருத்திரர்
விரவி யேபுகு வித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே (3386)

ஐந்தெழுத்தினிடம் விளங்குகின்ற இந்த அருள் தன்மைக்கு எடுத்துக் காட்டு, இராவணனே என்று சம்பந்தர் மேலும் காட்டுகிறார்.

கடுத்தவாள் அரக்கன் கயிலைஅன் றெடுத்த
கரம்உரம் சிரம்நெரிந் தலற
அடர்த்ததோர் விரலால் அஞ்செழுத்துரைக்க
அருளினன் தடமிகு நெடுவாள் (4086)

இவைமட்டுமல்ல. சிவநாமத்தை உச்சரிக்கும் அனைவருக்கும், பக்குவமுடையார், பக்குவமில்லாதார், உபதேசம் பெற்றார், பெறாதார் அனைவருக்கும் ஈடுபாடு தரவல்லதாகிய ஒரு பாடல் மிகவும் சிறப்பானது. ''இறைவனுக்கு நல்லவர், தீயவர் என்ற வேறுபாடுமில்லை. தன்னை அடைந்தவர் அனைவருக்கும் பெயரைச் சொல்பவர் அனைவருக்கும் துன்பம் போக்கி, மலமாயை தன்னோடு வல்வினையும் போக்கி சிவநெறி தரவல்லதாகத் திருவைந்தெழுத்து அமைந்திருக்கிறது.

நல்லவர் தீயவர் எனாது நச்சினர்
செல்லல் கெடச்சிறு முத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே.

என்ற அருமைப் பாசுரம் இங்குக் கருதத் தக்கது. திருவைந்தெழுத்தைச் சொன்னால் போதும்: சொல்வோரிடையே நல்லவர் தீயவர் என்ற வேற்றுமை இல்லை, யாவருக்கும் பயன் உண்டு என்பதை இப்பாசுரம் உணர்த்துகிறது.

உலகில் அனைவருக்கும் யமபயமே பெரிய பயம். இந்தப் பயத்திலிருந்து இப்பாடல் விடுதலை தருகிறது என்றால்

பொருந்தும். யமதூதர்கொண்டு போமிடத்திலும் வரவிருக்கும் துன்பத்தைப் போக்கி ஆறுதலைத் தருவது திருவைந்தெழுத்து. இதைச் சொல்பவர் சம்பந்தர். "ஆணை நமதே" என்று பலமுறை அதிகாரபூர்வமாகப் பாடியவர் அவர் என்பதை நாம் மறக்கக்கூடாது.

பாவிகளை இரட்சிக்கவே உலகில் ஏசுநாதர் அவதரித்தார் என்று விவிலிய நூல் கூறுகிறது என்பது கிறிஸ்தவர் கருத்து. அதே இரட்சிப்பைத் திருவைந்தெழுத்துத் தருகிறது என்று சைவ வேதம் கூறுகிறது.

துன்புற்ற மக்களுக்கு உய்தி வேண்டும். உய்திக்கு எளிய பாதையும் வேண்டும். இவை அமையாவிட்டால் அறியாமையிலும் அதனால் விளைகின்ற வினைத்துயரிலும் சோகக் கடலிலும் மூழ்கிய உயிர் கரையேறாது. கரையேற வேண்டும் என்ற நினைவும் வராது. ஆகவேதான் திருவைந்தெழுத்தை ஓதுதல் எளிதான நெறி. இது நல்லோர் தீயோர் என வேற்றுமை பாராட்டாது செல்லல் கெடச் செய்து சிவமுத்தி காட்டுவது என்று பெரியோர் பாடினர்.

பட்டினத்துப் பிள்ளையார் திருவிடை மருதூர் மும்மணிக் கோவையில் ஒருநீண்ட பாடலில் இக்கருத்தினை மிகவும் நன்றாய்த் தெளிவுபடுத்தி இருக்கிறார். "திருவிடை மருதில் உறையும் பெருமானே, உலகில் மக்கள் அனேகர் முத்தியடைதல் வேண்டித் துன்பத்தை விரும்பி ஏற்றுக் கடுந்தவம் செய்கிறார்கள். ஆனால் யாமோ அவை செய்யாது, உலக வாழ்க்கையில் ஆழ்ந்து போகங்களை எல்லாம் நன்கு துய்க்கிறோம் அப்படி இருந்தபோதிலும், முத்தியிழந்தோமில்லை. காரணம் நின் ஐந்தெழுத்தோதிய புண்ணிய விசேடம். வலிமை உடையவன் எறிந்த கல் வானத்தில் அதிக உயரம் செல்லுகிறது. வலிமை இல்லாதவன் எறிந்த கல் கொஞ்ச உயரமே செல்லுகிறது. இருப்பினும், இரண்டும் நிலத்தில் வந்து விழத் தவறுவதில்லை. அதுபோல, உனது நாமத்தைத் தெரிந்து சொல்லினும், தெரியாமல் சொல்லினும் நற்பயன்பெறத் தவறுவதில்லை!"

மந்திரம் எழுத்தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழிச் செலுத்தலின், அந்த
முத்தியும் இழந்திலம், முதல்வ! அத்திறம்
நின்னது பெருமை அன்றே! என்னெனின்
வல்லான் ஒருவன் கைம்முயன்று எறியினும்,
மாட்டா ஒருவன் வாளா எறியினும்,
நிலத்தின் வழாஅக் கல்லே போல,
நலத்தின் வழாஅர்நின் நாமம் நவின்றோரே.

இப்பாசுரங்கள், யாவர் எந்த நிஃலயில் இருப்பினும் திருவைந்தெழுத்தை ஓதுவாராயின் நல்ல கதி அடைவது நிச்சயம் என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன.

திருவாசகத்து மாணிக்கவாசகர் "ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே" என்று கூறுமிடத்தும் இக் கருத்துப் படவே பொருள் செய்தல் வேண்டும். அவனது அருளொளி யானது அவனை ஓர்பவர் ஓராதவர் இருவரிடத்தும் இருக்கிறது. ஓராதாரிடத்து இல்லை என்பது அவனுக்குப் பெருமையன்று அல்லவா? ஆனால் இங்கு அவ்வொளி ஒளித்திருக்கிறது; இறைவனை ஓராதவர் அவ்வொளியைக் காணவில்லை என்பதே கருத்தாகும்.

இங்ஙனமாக, திருவைந்தெழுத்து தீயவர் என்று வேற்றுமைப்படுத்தி விலக்காமல், அனைவருக்கும் உய்தி தருவது என்ற சிறப்பான கருத்தையே இவ்வருட்பாசுரத்தின் மூலம் நாம் நினைவில் கொள்ளவேண்டும். இது மக்களை நாம் ஜபத்தில்-பஜனையில் ஈடுபடச் செய்து அதன் மூலம் உய்தி பெறலாம் என்ற திடநம்பிக்கையையும் ஊட்டும்.

திருக்கலிக்காமூர்

(மூ. அ.)

இடம் :—திருவெண்காட்டிலிருந்து சீர்காழி நோக்கித் திரும்பும் பஸ் மார்க்கத்தில் 6 பர்லாங் சென்று வடக்கே திரும்பிச் செல்லும் கப்பிச் சாலையில் முதலில் மேல்புறமாகக் குறையலூர் என்ற திருமங்கையாழ்வார் அவதாரஸ்தலம் இருக்கிறது. அதைக் கடந்து மேலும் ஒரு மைல் தூரம் சென்றால், திருக்கலிக்காமூர் சாலைக்குக் கிழக்காகச் சில கஜ தூரத்தில் உள்ளது. எதிரில் திருக்குளம். 1954இல் திருப்பணி நடைபெற்றது.

பெயர் :—கலிக்காமூர் இன்று அன்னப்பன் பேட்டை என்று வழங்குகிறது. சுவாமி பெயர் சுந்தரேசர்; அம்பிகை தமிழில் சுந்தராம்பிகை; அழகம்மை, அழகுவன முலையம்மை என்றும் சொல்வதுண்டு. தலவிருட்சம் வில்வம் போலும். இங்கே சுவாமியே வில்வநாதராய் இருந்திருப்பார். கருவறையின்மேல்புறத்தில் முருகன் கோயில். அடுத்துத் தனியாக வில்வவனநாதர் கோயிலும் அங்கு மகாலிங்கமும் அம்பிகையும் சண்டேசரும் உள்ளனர் இவ்வம்பிகை அகிலாண்டேசுவரி.

—புணர்கலிக்கா

மூர்சார் அழகு வனமுலையோடு ஒன்றுசுந்த
ரேசா அமரர்க்கு இறைவனே.

கோயில் :—சிறிய கோயில், கோபுரம் இல்லை. பிரகாரம் மண்ணாக உள்ளது. கோட்டம் தக்ஷிணாமூர்த்தி. நிருதியில் விநாயகர். அடுத்து முருகன் கோயில். முருகனும் தேவியரும் சிறிய வடிவினர். அடுத்து முன் கூறியபடி வில்வவனநாதர் கோயில். பின்னர் மகாலக்ஷ்மி கோயில்: வடபுறம் சண்டேசர் கோயில். பின்புறக் கோட்டத்தில் உருவம் இல்லை, ஆனால் மேலே சுதையில் திருமால் இருக்கிறார். கோட்டத்திலும் திருமால் இருந்தார் போலும். செங்

கற்கோயில். சுவாமி சந்நிதியில் வௌவால் நெற்றி மண்டபம்; கருவறையின் விமானம் சிறப்பாயுள்ளது.

மூர்த்தி :—மகாலிங்கம் சிறிய திருவுரு. வாயிலில் சிறு விநாயகர். உற்சவர் பஞ்சமூர்த்திகளும் உள்ளனர். கலியாண சுந்தரமூர்த்தி சிறப்பான பழைய வடிவம். சுப்பிரமணியர் தண்டாயுதபாணியாக உள்ளார். சோமாஸ் கந்தருக்குரிய தனி அம்பிகை நெடுங்காலத்துக்கு முன் கடலில் இருந்து கிடைத்தது என்று குருக்கள் குறிப்பிட்டார். பார்க்கும்போது அப்படித் தோன்றவில்லை. சோமாஸ்கந்தர் வடிவத்துக்குப் பொருத்தமான தனி அம்பிகையாகவே காட்சி தருகிறார். பைரவர் கிழக்கில் தனியான கைலாயநாதர் சதுரமான பீடத்திலுள்ளார். பெரிய வடிவம். அருகில் விநாயகர், பராசரமுனி, மாரி, பத்திரகாளி உள்ளனர்.

பாடல் :—சம்பந்தர் தேவாரம், மூன்றாம் திருமுறை ஒரு பதிகம். கடலருகே உள்ள கலிக்காமூர் என்று பாடியிருக்கிறார்.

வரலாறு :—இங்கு பராசர முனிவர் வழிபட்டதாகச் சொல்வர். ஆதியில் இங்கு வில்வவனநாதர் இருந்ததாகவும் பின்னர் வந்த சுந்தரேசருக்கு இடங்கொடுத்து விட்டு அவர் மேல் புறம் ஒதுங்கிக்கொண்டதாகவும் ஒரு வரலாறு உண்டு.

நிர்வாகம் :—4 ஏகரா சொத்து உண்டு. அறங்காவலர் உள்ளார்.

சிறப்பு :—கலியாண சுந்தரமூர்த்தி வடிவம்.

திருக்குறளில் பிறப்புண்மை

(கா. சிவகாமியம்மையார் எம். ஏ., உதகை)

இறைவன் தனது பேரருளால் மாயையினின்று உலகையும் ஆன்மாக்களுக்கு உடலங்களையும் தந்து அதன் மூலம் சிற்றறிவு விளங்கச்செய்து, அவ்வான்மாக்கள் தன்னை வந்து சாரும் வண்ணம் வகை செய்தனன். ஆனால் ஆணவமாய இருள் கடியப் பிறந்த உயிர்கள் மாயையின் வயப்பட்டுக் கன்மத்தை ஈட்டிக் குவித்துக்கொண்டு பிறந்திறந்து உழல்கின்றன. பிறப்பிற்கு வித்தாவது 'கன்மம்' அல்லது இருவினை; இதனைப் பெரும்பாலும் பிறவிகள் பல உண்டு என நம்புகின்ற எல்லாச் சமய வாதிகளும் ஒத்துக்கொள்கின்றனர். திருவள்ளுவர் காலத்திலிருந்த தமிழகச்சமயங்களை மட்டும் இங்கு பார்ப்போம்.

திருவள்ளுவர் காலத்தில் சமணபௌத்த மதங்கள் தமிழகத்தில் செல்வாக்கோடிருந்தமையைவைத்து, அவரைச் சிலர் சமணத்தோடும், வேறுசிலர் பௌத்தத்தோடும் இணைக்கப் பார்க்கின்றனர். ஆனால், சமணரும் பௌத்தரும் 'பதி'யை அதாவது இறைவனை ஒத்துக்கொள்ளாத 'நிரீசுரவாதிகள்'1 என்பதை முன்பே பார்த்தோம். இங்கு அவர்கள் 'வினை' அல்லது 'ஊழ்' பற்றியும் எங்ஙனம் சித்தாந்திகளினின்றும் மாறுபடுகின்றனர் என்பதைப் பார்ப்போம்.

சமணரும் பௌத்தரும் வினைக்குச் சகல வல்லமையையும் அளிக்கின்றனர். சமணர்களால் பாடப்பெற்ற நாலடியாருள்,

> " பல்ஆவுள் உய்த்து விடினும் குழக்கன்று
> வல்லதாம் தாய்நாடிக் கோடலை—தொல்லைப்
> பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
> கிழவனை நாடிக் கொளற்கு"2

---

1. இந்திய தத்துவஞானம் பக். 56, 79f சைவ சித்தாந்த ஞான போதம்–பக் 44
2. நாலடியார்–பழவினை செய்–101

என்ற பாடலில் வினை தானே தனக்குரியானை நாடிச் செல்லும் என்ற கருத்தைக் காணலாம். பௌத்தரும், 'வினையை, வினைக்குரியானோடு சேர்க்க ஓர் இறைவன் வேண்டாம், வினை தானாகவே தனக்குரியானை அடைய வல்லது"1 என்ற முடிவையுடையவர். ஆனால் திருவள்ளுவர், ஊழ் என்ற அதிகாரத்துள் அதற்கு அத்துணை ஆற்றலைத் தாராது,

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது2" என்றனர்.

'வகுத்தான்' என்ற சொல்லுக்குப் பரிமேலழகர் "ஒருயிர் செய்த வினையின் பயன் பிறிதோருயிரின் கண் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின் வகுத்தான்' என்றார்" என்று பொருள் கூறுகின்றார் இங்கு திருவள்ளுவர், சமண பௌத்தர்களைப் போலல்லாமல், 'வகுத்தான்' என இறைவனையும் ஒத்துக்கொண்டு அவனே, வினையை நியதிப்படுத்துபவன் எனவும் கூறுகின்றார். இதுவே சைவர்களது நெறியுமாகும். இந்நெறியை மேற்கொண்டே, சேக்கிழார் தமது பெரியபுராணத்துள், "செய்வினையும் செய்வானும் அதன் பயனும் சேர்ப்பானும்" எனப் பாடியுள்ளமையும், அருள் முனிவரான தாயுமானாரும்,

"வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனு பெரும்
வழக்குக் கிழுக்கு முண்டோ"3

எனக் கசிந்துருகிப் பாடுவதையும், இராமலிங்க வள்ளலும்,

"தீவினை நல்வினை எனும்வன் கயிற்றால் இந்தச்
சீவர்களை ஆட்டுகின்ற தேவே"4

எனக் குறிப்பதையும் காண்க. எனவே, வள்ளுவர், ஊழை வகுத்தான் ஒருவனைக் கூறுதலானும், இன்னும் ஏனைய

1. இந்திய தத்துவ ஞானம் பக் 80
2. குறள்–377.
3. தாயு. சுகவாரி–3. 4. திருவருட்பா-மகாதேவ மாலை.

அடிப்படை வேற்றுமைகளாலும்* சமணபௌத்தவாதி களோடு சேர்த்து எண்ணப்பெருது சைவர்களோடே சேர்த்து எண்ணத்தக்கவராவார்.

திருவள்ளுவர் 'பிறப்பு' என்ற சொல்லை மட்டும் இருபது இடங்களுக்கும் மேல் எடுத்தாண்டுள்ளார்1, கட வுள் வாழ்த்திலேயே, 'பிறவிப் பெருங்கடல்' எனவும் 'பிற வாழி' எனவும் பிறப்பைக் கடலுக்கு உவமித்துக் கூறுவ தன்மூலம் பிறவிப் பிணியின் கொடுமையைச் சுட்டுகின் ருர். இதனை உமாபதிசிவனுர் தம் நெஞ்சுவிடுதூதினுள், "2வெம்பிறவித் துய்ய கடல்" என்றும், மாணிக்கவாசகர் திருவாசகத்துள்,

"பெரும் பிறவிப் பவ்வத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு"3

எனவும் பாடுகின்றனர். பிறவி என்பது ஒரு நோய்4. அதனை வள்ளுவர் "பேதைமை5" என்கின்ருர். உறங்கி விழிப்பதுபோல ஆன்மா பிறந்து இறந்து அலமருகின் றது. இருளுள்ளும் 'மருளு'ள்ளும் மாறி மாறி ஆன்மா அருள்நெறியடையாது-செம்பொருள் காணுது துன்புறு கினறது எனவேதான் வள்ளுவர்,

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"7

என்பதை உணர்த்தி,

---

1. குறள்கள், 38, 98, 107, 126, 133, 243, 303, 330, 339 345 349, 351, 356, 357, 358, 361, 362, 972, 1315 முத லியனவாம்.
2. நெஞ்சுவிடுதூது-67. 3 திருவாசகம்–திருச்சதகம்–27.
4. குறள்–359 60 5 குறள்–358. 6 குறள்-339.

* சமண பௌத்தர்கள் 4 பூதங்களையே ஒத்துக்கொள்ள வள்ளுவர் ஐம்பூதங்களை ஒத்துக் கொள்பவராக இருக்கின் ருர்.

7. குறள்–336

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"1

என்றும் அறிவுறுத்தினர். எனவே மாணிக்கவாசகரும் "மீண்டும் வாராவழியருள்" எனப்பாடிப் பரவுகின்றார்.

"ஈண்டு வாரா நெறியை" எங்ஙனம் பெறுவது?' 'அவா' என்பது, ஒழியாமல் வருகின்ற பிறவித்துன்பத்தை தரவல்லது2 என்பதை உணர்ந்து "பற்றற்றான்" பற்றினைப் பற்றி எல்லா விதப் பற்றுகளினின்றும் நீங்கவேண்டும்3. ஏனென்றால் "பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்4" இக்கருத்தை உய்ய வந்த தேவரும்,

"பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றிலப்
பற்றை யறுப்பாரென் றுந்தீபற"5

எனக்கூறிச் செல்லுகின்றார்; பற்றுவது பிடிப்பு. எதனிடத்துப் பிடிப்பற வேண்டும்? எல்லாவற்றினிடத்துமே பற்றறவேண்டும். அஃதாவது, '6தீவினையைச் செய்தவன் துன்பத்தை அனுபவிக்கப் பிறப்பது போல, நல்வினையைச் செய்தவன் இன்பத்தை அநுபவிக்கப் பிறக்கிறான்... எனவே பற்றற்ற வினைதான் பிறப்பை ஒழிக்க வழி. அதாவது நல்வினையை நான் செய்தேன் என்ற தன் முனைப் போடு செய்யாது7 அதன் பலனையும் எதிர்பாராது எல்லாம் திருவருள் என்ற கருத்தோடு செய்வதே பற்றற்ற வினை...தீவினைப் பயனில் வெறுப்பும், நல்வினைப் பயனில் விருப்பும் கொள்ளாத ஒரு நிலையை அடையவேண்டும்.

---

1. ,, –356
2. ,, –361
3. ,, –350
4. ,, –349
5. திருவுந்தியார்–14
6. இந்திய தத்துவ ஞானம்–பக்-407-8
7. "யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" என்பது குறள்-346

இந்த நிலைதான் சைவசித்தாந்தத்தில் இருவினையொப்பு[1] என்ற பெயரால் குறிக்கப்படுகின்றது. துன்பம் யாவற்றையும் துடைக்க இதுவே வழி?" எனவேதான் வள்ளுவரும், "பிறப்பறுக்கல் உற்ருர்க்கு உடம்பும்மிகை"[2] என உடற்பற்றைக்கூட மிகை என்கின்ருர்.

பிறவிச் சலிப்பை,

"மாதா வுடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவும் கைசலித்து விட்டானே—நாதா
இருப்பையூர் வாழ்சிவனே இன்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா"

எனவும்,

"பிரமன் படைத்தலுத்தான் பிறந்திறந்து நானலுத்தேன்"

எனவும்,

"ஒழியாப் பிறவி யெடுத்தெடுத்தேங்கி யுழன்ற நெஞ்சே"

எனவும் பட்டினத்தார் நெக்குருகப் பாடுகின்ருர். பத்திரகிரியாரும்

"ஓயாக் கவலையினுல் உள்ளுடைந்து வாடாமல்
மாயப்பிறவி மயக்கறுப்ப தெக்காலம்"

எனப் புலம்புகின்ருர். "வினைப் பிறவி என்கின்ற வேதனையைக் கண்டு" மாணிக்கவாசகரும், "செறியும் பிறவிக்கு நல்லவர் செல்லன்மின்" என்று எச்சரிக்கை செய்கின்ருர். பிறவியின் பேதைமையைக் கண்ட வள்ளுவரும், இவர்கட்கெல்லாம் பல நூற்ருண்டுகட்குமுன்பே

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்"[3]

---

1. வேண்டுதல் வேண்டாமை இலான்-குறள்-4.
2. குறள்-345.
3. குறள்-362.

எனப் பிறவாமையை வேண்டி, அதற்கு அவா அற்ற நெறியை வழியாகக் கூறிப் போந்தார். தீரத் தெளிந்து கூறிய தெய்வப் புலவனின் இக்குறளை. சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்றாகிய திருக்களிற்றுப் பாடியாருள்;

> "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
> வேண்டினஃ தொன்றுமே வேண்டுவது—வேண்டினது
> வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
> வேண்டாமை வேண்டுமவன் பால்."[1]

எனச் 'சத்தியவாக்காகக்'கொண்டு எடுத்தாண்டிருக்கின்றார் உய்ய வந்த தேவர்.

இங்ஙனம் 'பிறப்பு' பற்றிய கொள்கையிலும் திருவள்ளுவர் சைவநெறியாளரே என்பது தெளிவாகின்றது. 'பிறவாயாக்கைப் பெரியோனாகிய' 'முக்கட் செல்வனின்' வழிபாட்டையுடையவரே வள்ளுவர் என்பதை அறிஞர் நன்குணர்வர்:

1. திருக்களிற்றுப்படியார்–38

——:0:——

ஐப்பசித் திங்கட் சிறப்பு நாள்கள்

5 (21-10-68) — தீபாவளி விழா
6 (22-10-68) சுவாதி மெய்கண்ட தேவ நாயனார் விழா
8 (24-10-68) அனுடம்—பூசலார் நாயனார் விழா
10 (26-10-68) மூலம்—ஐயடிகள் காடவர்கோன் நாயனார் விழா
11 (27-10-68) — கந்தர் சஷ்டி விழா
19 (4-11-68) அசுபதி—திருமூல நாயனார் விழா
20 (5-11-68) பரணி—நின்றசீர் நெடுமாற நாயனார் விழா
21 (6-11-68) கார்த்திகை—இடங்கழி நாயனார் விழா
26 (11-11-68) பூசம்—சத்தி நாயனார் விழா

காந்தி அடிகளின் நாமம் வாழ்க!

மு. அருணாசலம் எம். ஏ.,

எல்லோரையும் போல ஒரு சாமானியக் குழந்தையாகப் பிறந்த மோகனதாஸ் கரம்சந்த் காந்தி, மகாத்மா காந்தியாக மறைந்தார். தம்முடைய வாழ்க்கை முழுமையும் ஒரே பெருங்கொள்கையை அவர் பேணிவந்தார். ஒரு காசின் இருபக்கங்கள் என்று அவர் சொல்லி வந்த அன்பு, சத்தியம் என்ற இரு பெரும் தத்துவங்கள் அவரது வாழ்க்கையை நடத்தி வந்தன. உலக மக்கள் அனைவரும் தமது புகழைப் போற்றி உரைப்பார்கள். ஆனால் புன்மையைப் பொதிந்து மூடுவார்கள். ஆனால் காந்தியடிகளோ தம்மைப் பிறர் மகாத்மா என்று புகழ்ந்ததற்கு நாணினார். ஆனால் தமது குறைகளைச் சிறிதும் தயக்கமின்றி வெளிப்படையாக ஒப்புக்கொண்டார். சென்ற ஐம்பது ஆண்டு கால இந்திய சரித்திரம் காந்தியடிகளின் சொந்த சரித்திரமே என்னும்படி அவர் வாழ்ந்தார்.

"இவர் களிமண்ணைப் பிசைந்து பெரும் வீரனுக்கும் வலிமை படைத்தவர்" என்று கோகலே ஒரு சமயம் கூறினார்.

இந்திய வாழ்க்கையில் காந்தி அடிகள் ஈடுபடாத எந்தத் துறையும் இல்லை; ஈடுபட்டு எல்லாத் துறைகளுக்கும் புதுவாழ்வு அளித்தார். அரசியலில் அவர் ஈடுபட்டுச் சுதந்திரம் பெற்றுத் தந்தார் என்பது எல்லோரும் அறிந்த செய்தி. சமூகத் துறையில் தீண்டாமையை அகற்றி மக்கள் அனைவரும் ஒருகுலம் என்று உணரச் செய்தார். சமயத் துறையில் தம் உயிரையும் கொடுத்து இந்து முஸ்லிம் ஒற்றுமையை நிலை நாட்ட முயன்றார். தொழில் துறையில் கையால் நூற்றுத் துணி நெய்யும் தொழிலுக்குப் புத்துயிரளித்துப் பல கோடி மக்களுக்குப் புதுவாழ்வு அளித்தார். இயந்திரத் தொழிலல்லாமல் கிராமக் கைத்தொழில் எங்கும் ஓங்கப் பெருமுயற்சி செய்தார்; கல்வித்

துறையில் உலகமே போற்றுகின்ற புதிய கல்வித் திட்டம் வகுத்துத் தந்தார். மேலை நாட்டு மோகத்தில் மூழ்கிக் கிடந்த நம் மக்களுக்கு இந்தியப் பண்பாடு என்ன என் பதை உணர்த்தி ஒவ்வொரு இந்தியனும் 'நான் சுதந்திர வீரன்' என்று அஞ்சாது மார்தட்டி நடக்கச் செய்தார். "ஆண்டவனுக்கே நான் அடிமை; மற்ற யாருக்கும் நான் அடிமையல்ல" என்ற உணர்வு பெறச் செயதார். ஆங் கில மோகத்தில் மூழ்கிக் கிடந்த மக்களைத் தாய் மொழி யில் பற்றுக்கொள்ளச் செய்தவரும் அவரே.

ஆனால், அவரைக் குறித்து நாம் இங்கே சிறப்பாகச் சொல்ல விரும்புவது அவர் மக்களைக் கடவுள் நெறியில் ஈடுபடுத்தியது ஒன்றேயாகும். சத்தியமே கடவுள் என்ற பெருந் தத்துவத்தைப் போதித்த காந்தி அடிகள் அன்பே கடவுள் என்று போதித்த திருமூலரின் நேர் வாரிசு என்று நாம் நன்கு கூறலாம். அன்பே சிவம் என்ற திருமூலர் கூற்றும் சத்தியமே கடவுள் என்ற காந்தி அடிகளின் கூற் றும் ஒன்றே. தம்முடைய ஒவ்வொரு மூச்சிலும் அவர் கடவுளை உணர்ந்து கடவுளிடத்தில் சரண் புகுந்து அவர் காட்டிய வழியில் தாமும் நடந்து நாட்டையும் நடத்திச் சென்றார். ஆனால் காந்தி மறைந்த பின் நாடு அவர் காட் டிய அன்பு வழியிலும் சத்திய வழியிலும் செல்லாமல் வேறு பொய்யான, கடவுள் தர்மத்துக்கு முரணான வழி யில் செல்கின்றது என்று ஸ்ரீராஜாஜி போன்ற பெரியார் பலர் மனம் வெதும்பிக் கூறுகின்றனர். அது உண்மையே.

காந்தி அடிகளுக்கும் சைவ மக்களான நமக்கும் உள்ள தொடர்பு ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிட்டு இதை முடிக்கலாம். காந்தி அடிகள் முதன் முறை சிதம் பரம் வந்தபோது மீனாட்சி கல்லூரியின் எல்லைக்குள் நுழைய அவருக்கு அனுமதி மறுத்துவிட்டார்கள். அப் போது கல்லூரி எல்லைக்கு மேல் புறத்து உமாபதி சிவா சாரியார் வாழ்ந்த கொற்றவன்குடித் தோப்பில் ஒரு கூட் டம் நிகழ்ந்தது. அப்போது அவர் நந்தனாரைப் பற்றிப் பின்வருமாறு பேசினார். "நந்தனாருடைய வாழ்க்கைச் சரித்திரத்தையும் அவர் செய்த பெருந்தன்மை பொருந்

திய சத்தியாக்கிரகத்தையும் அதில் அவர் பெற்ற வெற்றி யையும் நான் கேட்டும் படித்தும் அறிந்தபோது அம் மெய் யடியாரை எண்ணிச் சிரம் தாழ்த்திப் பன்முறை வணங்கி னேன். நந்தனருடைய புனிதமான திருவடிகள் பட்டுத் தூய்மை பெற்ற இந்தத் தலத்துக்கு நான் வர இயன்றதை எண்ணும்போது என் உள்ளம் மிக்க உணர்ச்சி பெற்றது. நாள் முழுதும் இவ்வுணர்வு என்னிடம் குடிகொண்டிருந் தது. நந்தனர் தீண்டாத குலத்துக்கு ஏற்பட்டிருந்த எல்லாத் தடைகளையும் அகற்றிச் சுதந்திரம் பெற்றது, ஆடம்பரப் பேச்சினல் அன்று. தாமே தம்மைத் துயரத்தில் ஆழ்த்திக்கொள்ள முடிந்தமையால்தான்; தம்மைத் துன் புறுத்தியவர்களை அவர் பழிக்கவில்லை. தமக்குரியதை அவர்களிடம் கேட்பதும் தம் தகுதிக்குக் குறைவென்று அவர் கருதினர். தம்முடைய உன்னதமான பிரார்த்தனை யினலும் தூய ஒழுக்கத்தினலும் தமக்கு அவர்களே மனம் வெட்கி நியாயம் வழங்குமாறு அவர் செய்தார். மனித பாஷையில் சொல்வதானல் கடவுளே இறங்கி வந்து மற்ற வர்களுடைய கண்களைத் திறந்து விட்டார் என்று சொல் லலாம். தம்முடைய காலத்தில் தாம் ஒருவராக நந்தனர் என்ன சாதித்தாரோ அதை நம்முடைய காலத்தில் நாம் ஒவ்வொருவரும் நிச்சயம் செய்ய முடியும்.''

காந்தி ஒருவரே தம் வாழ்நாளில் இவ்வாறு செய்து முடித்தார் என்று சரித்திரம் கூறுகிறது. அவரே தம் சத்தியத்தினலும் அன்பினலும் கடவுளே இறங்கிவந்து ஆங்கிலேயர் கண் திறக்கும்படி செய்து இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்கும்படிச் செய்தார் என்பது உலகம் அறிந்த செய்தி. மகாத்மா காந்தி அடிகளை உலகம் இரு ளில் மூழ்கிக் கிடக்கின்ற காலத்தில் கடவுளருளால் தோன்றி உலகை உய்விக்கும் அவதார புருஷர்களில் ஒரு வர் என்று அறிவுடை மக்களும் பாமரரும் கொள்வது எல்லா வகையிலும் பொருந்தும்.

இந்த அக்டோபர் மாதம் முதல் 1969 அக்டோபர் வரையில் உள்ள காலத்தை காந்தி அடிகளின் நூற்றாண் டுக் காலமாக இந்திய மக்களும் உலக மக்களும் கொண்

டாடி வருகின்றனர். நாமும் சித்தாந்த இதழ் வாயிலாக அவருடைய கருத்துக்கள் சிலவற்றை நினைவு படுத்திக் கொள்வோம்.

காந்தி அடிகளுக்கு 75 ஆண்டு நிறைந்தபோது (1944) உலகப் பெரும் விஞ்ஞானியாய் இருந்த ஐன்ஸ்டைன் அனுப்பிய செய்தி ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடு வோம்.

''தம் மக்களின் தலைவர். ஆனால் அவருக்குப் புறம்பே அந்த அதிகாரத்தின் துணையும் இல்லை- அவர் அரசியல் வாதியாயினும் எந்த அரசியல் தந்திரமோ வேறு அரசியல் யுக்திகளோ அவர் வெற்றிக்கு ஆதாரமல்ல; அவருடைய குண விசேஷத்தின் வலிமையே அவருக்கு ஆதாரம். அவர் வெற்றி பொருந்திய போர்வீரராயினும் படை பலத்தைத் துச்சமென்று தள்ளியவர். ஞானமும் பணிவும் நிரம்பிய அவர் மன உறுதியும் சிறிதும் வளையாத ஒருமைப்பாடும் கருவிகளாகக் கொண்டு தம் மக்களை முன்னேற்றி அவர் களுடைய நிலையை உயர்த்துவதற்காகப் பாடுபட்டவர்: ஐரோப்பாவின்' மிருக பலத்தை எளிமையான மானிடப் பண்பு ஒன்றையே கொண்டு எதிர்த்து அதனாலேயே எப் போதும் வெற்றி பெற்றவர். பல தலைமுறைகளின் பின் இப்படிப்பட்ட ஒருவர் உண்மையாகவே இந்த மண்ணுல கில் எலும்பு தோல் போர்த்து நடமாடினார் என்று யாரும் நம்ப மாட்டார்கள்.''

தூதுவிட்ட தொண்டர்

(S. சங்கரநாராயணன், திருமருகல்)

இன்ப துன்பங்கள் இவ்வுலக இயற்கை. இன்பம் வருங்கால் மகிழ்வது—துன்பம் வருங்கால் துயருறுவது— அனைத்துயிர்க்கும் பொது. இன்ப துன்பங்கள் ஏற்படுங்

கால் அவற்ருல் உண்டாகும் உணர்ச்சிகளைப் பிறரிடத்தே கூறி ஒருவகையில் ஆறுதலடைகின்ற நிலையினைக் கண்கூடாகக் காண்கிரும்! ஒரு தலைவி தன் தலைவனைப் பிரிந்து எத்துணையோ நாட்களாகி விட்டன. அவனைக்காணக் கண்கள் துடித்தன; அவனின் அன்பு மொழிகளைக் கேட்கக் காதுகள் விழைந்தன; அவனுடன் உரையாட வாய் விரும்பியது; அவனைத் தீண்ட உள்ளம் உவகை கொண்டது! ஆனல் தலைவனே, அவளின் உள்ளக் கருத்தினை உணர்ந்தும் உணராதவன்போல் வாளா விருந்தான்! நெஞ்சங் குமுறினுள் தலைவி. தனக்குரிய தலைவன்—தனக்கினிய தலைவன், தன்னைப் பிரிந்து நாட்கள் பல ஆகியும், விரைவில் தன்னைக் காண விருப்பமில்லாதவன்போல் இருக்கின்ருனே என ஏக்கங்கொண்டாள். அவனது பிரிவால் வாட்டமுற்ற அவளிடத்தே 'பசப்புத் தேமலுங்' கண்டுவிட்டது! "பிரிய வேண்டிய நிலைபற்றி என்பாற் கூறியபோது யானே மகிழ்ந்து உடன்பட்டேன். ஆனல், இன்று அதனை ஆற்ருது பசந்த என் நிலையினை யாரிடங் கூறவல்லேன்! முன்னர் உடம்படுதலும் பின்னர் ஆற்ருது பசத்தலும் பண்புடையார்க்கு அழகன்றே! யான் செய்துகொண்ட துன்பத்தினை இனியொருவர்க்குச் சொல்லலும் பழியாகுமன்ருே! விளக்கினது மெலிவுபார்த்து நெருங்கிவரும் இருளைபோல, என் தலைவன் முயக்கினது மெலிவுபார்த்து நெருங்கி வருகின்றதே இப்பசப்பு! முன்பெல்லாம் அவனைப் புல்லிக் கிடந்தயான், உண்மை உணராது புடைபெயர்ந்தேன்; உடனேயே, இப்பசப்பு அள்ளிக்கொள்வதுபோல வந்து செறிந்து விட்டதே! இரங்கத் தகுந்த இவ்விரு நிலையினைப் பிறரிடங்கூறி ஆறுதலடையலாமோவெனின் அதுவும் முடியாததாயிருக்கின்றதே! 'பிரிவை ஆற்றியிராது பசந்தாள்! என்று இவ்வுலகம் என்னைப் பழிகூறுகின்றதேயன்றி, 'அவளைப் பிரிந்து சென்றவன் வன்கண்ணன்' என்று அவனைப் பழிகூறுகின்றிலதே! யான் என் செயவல்லேன்? என்று தனக்குள்ளேயே சொல்லி வருந்திக்கொண்டிருந்தாள் தலைவி! அது சமயம், அவ்வழியே பறந்து சென்ற நாகண

வாய்ப் பறவை யொன்று அவள் இல்லத்தின் பின்புறத்தே அமைந்திருந்த மாக்கிளையில் அமர்ந்தது! தன் துயர நிலையி னைத் தலைவனுக்குத் தூதுபோக்கியாகிலும் தெரிவிக்கலாமே என்ற எண்ணந்தோன்றியது அவளுக்கு! உற்றார், உறவின ருள் யாரேனும் ஒருவரை வழித்தூது போக்கலாமென் றாலோ, தனக்கு நீங்காப் பழியுண்டாகும் என்ற அச்சம் ஒருபுறம்! ஒருவேளை தூதுசென்றாலும், தலைவனிடத்தே ஒன்றுக்குப் புறம்பாக மற்றொன்றைக் கூறிவிட்டால் என் செய்வது என்ற அச்சம் ஒரு புறம்! எனவேதான், ஆங்கு வந்தமர்ந்த நாகணவாய்ப் பறவை மூலமாகத் தன்கருத்தை வெளியிட்டுத் தூதனுப்பலாம் என்று எண்ணியதுபோலும் அவள் பேதை நெஞ்சம்!

பறவையைப் பார்த்துப் பேசலுற்றாள் அவள்! "ஏ நாகணவாய்ப் பறவையே! உன்னையான் அன்புடன் போற்று கின்றேன்!... உன்னுடைய வாய்—உனக்கே ஒருவிதத் தனியழகைத் தருகின்றது! எப்போதும் இன்சொற்களையே சொல்லிச் சொல்லிப் பயிற்சிபெற்ற வாயன்றோ அது! பகுத்தறிவு பெற்ற மக்கட் கூட்டங்கூட உன்னிடமிருந் தன்றோ நல்ல சொற்களைப் பயிலவேண்டி இருக்கின்றது!... ...உன்னையான் போற்றுகின்றேன்; உன்இனம் என்றும் வாழ வாழ்த்துகின்றேன்!......உன்பால் யானொன்று கூற எண்ணுகின்றேன்; அன்புடைமையால் என் கூற்றைச் செவி சாய்த்து உன்னாலியன்ற இச்சிறு உதவியினைச் செய்வாய் எனப் பெரிதும் நம்புகின்றேன்!"

'திருத்தோணிபுரம் என்று பலாலும் பெருமையாகப் பேசப்படும் திருத்தலத்தைப்பற்றி யான் சிறிது சொல்ல விரும்புகின்றேன்! சோறு, சோறு என்று அலைகின்றவர் கட்கெல்லாம் வரையாது வழங்கும் சோழநாட்டின் சிறப்பை நீ நன்கு தெரிந்திருப்பாய்! அத்தகைய நாட்டில், பன்னிரு திருப்பெயர்களோடு திகழ்கின்றது திருத்தோணிபுரம் என்ற சிவத்தலம், செண்பக மரங்கள் மிக்க தண்ணாறும்

பொழில்களினூடே அழகுறக் காட்சியளிக்கும் மாட்சிமைப் பட்ட அவ்வூரின்கண்ணே, தமிழோடு இசைபாடும் இளஞ் சிறுர்களின் இன்னிசை ஒலி நாள் தவருமல் முழங்கிக் கொண்டே இருக்கும் வானத்தையும் முட்டிமோதி நிற்கு மளவில் நீண்டுயர்ந்த மாடங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்ட அவ்வூரிலே உள்ள பாதைகளோ, தேர்கள் அடிக் கடி நகர் வலம் வருவதால் மேடும் பள்ளமுமாகக் காணப் படும்! "தென்றல் வந்துலவும் திருத்தோணிபுரம்" என்று சிறப்பாகப் போற்றப்பெற்ற அவ்வூரிலேதான், எனக்கினிய தலைவன் வீற்றிருக்கின்றான்; என்னுடைய மூன்றும் வயதி லேயே என் உள்ளத்தைக் கொண்டு சென்ற பன்மாயக்கள் வன் அவன்! "கண்ணுதலான்; வெண்ணீற்றான்; கமழ் சடையான்; கறையணிகண்டன்; பிஞ்ஞகன்; பிறையணி செஞ்சடையான்; மறைமொழி வாய்மையினன்; மழுவாட் படையினன்; மறைபல்கலை நூலுடையான்; வெண்தோடணி காதினன்; விடையேறி பெண்ணிதமாம் உருவத்தான்" என்பன போன்ற பல திருப்பெயர்களை உடையவன்! அவன் பெருமையினை நாள்தோறும் சொல்லிக்கொண்டே இருக்கலாம். ஆனால் சுருக்கமாக ஒன்றிரண்டு உனக்குச் சொல்லுகிறேன். "பிரளய காலத்தில் உலகம் அழிந்த போது பிரணவம் தோணியாக மிதக்க அதில் வீற்றிருந்த பெருமை பெற்றவன் அவன்! 'பிரமபுரீசுவரர்' என்றும் 'தோணியப்பர்' என்றும் அருமையாக அவனை அழைப்பர்!"

"நாகணவாய்ப் பறவையே! அத்தகைய தலைவன் என்னைத் தனியே தவிக்கவிட்டுச் சென்று நாட்கள் பல கடந்தன; அவனை மறக்கவும் என்னால் இயலவில்லை; அவனைக் கண்டு ஆறுதல் பெறுதற்கும் என்னாற்கூடவில்லை! அவன் பிரிவால் வாட்டமுற்ற என் உடம்பில் பசப்புத்தேமலுங் கண்டுவிட்டது; ஊரார் என் நிலைமையினைக் கண்டு எள்ளனம் செய்கின்றனர்! இவற்றையெல்லாம் என் தலைவன்பாற் சென்று கூறமாட்டாயா?" என்று கனிந்த உள்ளத்துடன் பேசுகின்றாள்! அவள் பேச்சினைச் செவிமடுப்பதுபோல்

அமைதியாக இருந்த நாகணவாய்ப் பறவை, சிறிது நேரத்தில் வெளியே பறந்து சென்றது! "தன்னுடைய குறைகளை யெல்லாம் தன் தலைவன்பாற் கூறத்தான் போகின்றது!" என்று நினைந்து மகிழ்ச்சியிற்றிளைத்தாள்! சிறிது நேரங் கடந்தது; வான்வழியே பறந்து சென்ற கிள்ளை ஒன்று ஆங்கே, அவளருகே வந்தமர்ந்தது! தன் தலைவனைக் காணக் கொடுத்துவைக்காவிடினும் அவனின் திருப்பெயரை யாவது கேட்டு ஆறுதலடையலாமே என்ற எண்ணந்தோன் றியது தலைவிக்கு! 'சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளை" என்னும் பழமொழியை நன்கு உணர்ந்தவள் அவள்! "நமது தலைவனின் திருப்பெயரை அக்கிள்ளையிடத்தே கூறுவோமேயானால் சிறிது நேரங் கழித்துத் தானே திரும் பச் சொல்லுமன்றே! அப்போதாவது அவன் திருப்பெய ரைக் கேட்கும் பேறு கிட்டுமே" என்ற ஆர்வம் அவளுக்கு!

"கைம்மாறு கருதாது பணிபுரியும் தன்மை மக்கட் கூட்டத்தே கூட காண முடிவதில்லை; அவ்வாறிருக்கக் கிள் ளைகள் மட்டும் விதிவிலக்கா?" என்று எண்ணினாள். "ஆம்! நாம் ஏதாவதொரு சிறு உதவியைச் செய்தால் அக் கிள்ளையும் நம் விருப்பத்தினை நிறைவேற்றும்!" என்று துணிந்தாள்! அக்கிள்ளையும் உணவு தேடுதற்காக அங்கு மிங்கும அலைந்து ஒன்றுங் கிட்டாமல் தவித்து நிற்கும் துயர நிலையினைக்கண்டு கொண்டாள்; அதற்கு உடனடித் தேவை-உணவு! "தலைவன் பிரிவாலுண்டாகும் துயரத் தால் நமக்கோ உணவு கொள்ள முடிவதில்லை! அவ்வுணவை கிளிப்பிள்ளைக்குக் கொடுத்தால் அதன் வயிறும் நிறையும்; நம் விருப்பமும் நிறைவேறும்! நாமும் சிறிது மன நிறைவு கொள்ளலாம்! என்று எண்ணியவளாய்க் கிள்ளையைப் பார்த்துப் பேசலுற்றாள்!

"அன்புக்கிளியே! ஒரு முறை இங்கே வா!... இளங் கிளியே! உன்னுடைய சிறகுகள்தாம், கண்ணையும் கருத் தையும் கவரத்தக்க முறையில் எவ்வளவு அழகாக அமைந்

துன்னை!......பசித்துன்பம் தாளாமையினல் பெரிதும் வாட்டமுற்றிருக்கின்றாய் போலும்! ...... உன் பசியைப் போக்க என்னிடத்தே அருமையான உணவு இருக்கின்றது! தேனும் பாலும் கலந்த அவ்வுணவை நீ உண்ணும் படி, யானே-என் கையினாலே முறையாகத் தருவேன! ஆனல், நீ எனக்கு ஒரு உதவி செய்தல் வேண்டும்! அவ்வுதவியை யான் என்றும் மறவேன்! 'நன்றி மறப்பது நன்றன்று' என்ற அருமறைக் கருத்தினை நானுமறிவேன்! ஆதலின், நீ இப்போது, என் தலைவனின் திருப்பெயரைப் பலமுறை கூடச் சொல்லவேண்டுமென்பதன்று; ஒரே ஒரு முறை சொல்! அதுவே போதும்!......என் தலைவன்-யார் என்பதையும் சொல்லிவிடுகின்றேன்!......மிக்க பவளமும் முத்தும் துறையிலே நிறைந்துள்ள கடலினை அடுத்த திருத்தோணிபுரம் என்னும் அருமையான ஊரின்கண் இருப்பவன்; தன்முடியிலே அசைகின்ற இளம்பிறை சூடியவன்; எல்லார்க்குந்தான் ஈசன்!......அவனுடைய திருப்பெயர் களை யான் மகிழும்படி ஒரே ஒரு முறை சொல்லமாட்டாயா? அதனைக் கேட்டாகிலும் சிறிது ஆறுதலடைவேனே!" என்று நெஞ்சம் குழைந்துருகும் வண்ணம் பேசுகின்றாள்! அவள் பேச்சினை நாமும் காது குளிரக் கேட்போம்.

"நற்பதக்கள் மிக அறிவாய் நானுன்னை வேண்டுகின்றேன்
பொற்பமைந்த வாயலகிற் பூவை நல்லாய் போற்றுகின்றேன்
சொற்பதஞ்சேர் மறையாளர் திருத்தோணி புரத்துறையும்
விற்பொலிதோள் விகிர்தனுக்கென் மெய்ப்பயலை
விளம்பாயே,"

"சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளம்
துறையாருங் கடல்தோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே!"

(1; 60: 210)

தமிழ்த் தெய்வம்.

(நெல்லை R. S. இராமலிங்கம்)

தமிழ்த் தெய்வம் என்ற தலைப்பைக் கண்டதுமே தமிழ்த் தெய்வம் முருகன் என்று அன்பர்கள் தீர்மானிப்பார்கள். தமிழ் மொழி மிகவும் இனிமையான மொழி என்றும், தனித்து இயங்கும் பெருமை வாய்ந்தது என்றும் அறிவோம். ஆதி சிவன் பெற்றுவிட்ட தமிழுக்கு, அகத்திய முனிவர் அரியதொரு இலக்கணம் அமைத்துத் தந்தார். மூவேந்தர்களும் தமிழை வளர்த்தார்கள். தெள்ளுதமிழ்ப் புலவோர்கள் பல தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்கள்.

அன்று முதல் இன்று வரை மாரு இளமையுடன் தமிழ் அன்னை விளங்குகிருள். அதனுல் "சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!" என்று தமிழ் மொழியை வாழ்த்துகிருர்கள். அவ்விதமே முருகப்பெருமானையும் அன்பர்கள் வாழ்த்துகின்றனர். அருளே திருவுருவாய் அவனியில் தோன்றிய அறுமுகப் பெருமான் உயிர்களுக்கு அருளமுதம் வழங்கி இன்பமே நல்கும் இயல்புடன் என்றும் இளமையாய் விளங்குகின்ருன். அதனுல் உலக முய்ய வந்துதித்த ஒரு திருமுருகனைத் "தமிழ்த் தெய்வம்" என்று அறிஞர்கள் கூறுவார்கள்.

முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன் முருகன் என்ருல் அவரைத் தமிழ்க் கடவுள் என்று அழைப்பதின் பொருள் நன்கு விளங்கும். தேமதுரத் தமிழோசை கேட்கவே அவர் பன்னிரு திருச்செவிகளுடன் திகழ்கின்ருர் போலும்! 'அவரைத் தினமும் பாடித் தோத்திரஞ் செய்ய அரிய தமிழ் அளித்தார்' என்று ஆறுமுகப் பெருமானை அருணகிரி நாதர் வழிபடுகின்ருர்.

> "அருணதள பாதபத்மம் அனுதினமுமே துதிக்க
> அரியதமிழ் தான்அளித்த—மயில்வீரா!"

முட்டைப் பெயர் செப்பிக்கவிபெறும் முருகன், அறஞ்செய விரும்பு, ஆறுவது சினம் என்று பாடிய ஔவையாருடன் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று தமிழில் உரையாடினுன், இன்தமிழ்ப் பாடலுக்கு இரங்கி

எல்லையற்ற திருவருளை இறைவன் அளிக்கின்றான். அதன் உண்மையை அடியில் வரும் செய்யுளால் அறியலாம்.

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும் என்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக்கதவம் திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ? மறுபுலச் சொற்களோ? சாற்றீர்!"

அன்றொருநாள் ஆரூரர் வேண்ட, பரமன் வந்து பரவையார் திருமனைக்கு இருபொழுது தூது சென்றான். 'பிள்ளைதரச் சொல்லு காலனையே'! என்று ஆரூரர் பாடவும் முதலை உண்ட பாலன் மீண்டும் உயிர்பெற்று வந்தான். 'அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்' என்று ஞான சம்பந்தர் தமிழ்மறை பாடவும் அங்கம் பூம்பாவை உயிர் பெற்று எழுந்தாள். இன்னமும் வேதாரண்யத்தில் அப்பர் பாடவும் அடைத்திருந்த மறைக்கதவம் திறந்தது. எனவே தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை உண்ட பாலனை அழைத்ததும், எலும்பு பெண்ணுருவாகிப் பூம்பாவை உயிர் பெற்று எழுந்ததும், மறைக்கதவம் திறந்ததும் தமிழ் மொழியால் ஆனதால் தமிழ் மொழியைத் 'தெய்வீக மொழி' என்றும், இனிய தீந்தமிழுக்கு இரங்கும் முருகனைத் தமிழ்த் தெய்வம் என்றும் புகழ்ந்து கூறுவர் பெரியோர்.

ஆனால் தமிழ்த் தெய்வம் என்று இங்கு எடுத்துக் கொண்ட பொருள் முருகனைப் பற்றி அன்று. செவ்வேள் முருகன் செந்தமிழ் மக்களுக்குச் சிறப்பான தெய்வமாய்ச் சிறந்து விளங்கினாலும், ஏனைய மொழி பேசும் எல்லா மக்களுக்கும் அவன் பொதுவான தெய்வமாய்ப் போற்றப்படுகிறான். கலியுகத்தில் எல்லா மக்களுக்கும் அவன் கண்கண்ட தெய்வம். ஆகவே தமிழுக்கு மட்டும் அவன் இறைவன் என்று கூறிவிட முடியாது. "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்பதும் காண்க.

உள்ளத்தில் ஆராத காதலுடன் உழவாரப் பணிசெய்து வந்த உத்தமர் நாவுக்கரசரை,

"உயர் தமிழுக்கு இறையோராம் இவர்"

என்று சேக்கிழார் நமக்கு அறிமுகஞ் செய்கிறார். எந்த சந்தர்ப்பத்தில் என்பதைக் கவனிப்போம். தமக்கு ஏற்பட்ட

சூலை நோய் தீரும் பொருட்டு தமக்கையாருடன் மருணீக்கி யார் திருவதிகை ஆலயத்திற்குச் சென்று திருவருளால் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்ற பதிகம் பாடவும் தீரா நோய் தீர்ந்தது.

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"

என்று இதுபோலும் இனிய தமிழ்ச் சொற்களால் இறைவனை வழிபடவும் அவரது நோயுந் தீர்ந்தது; அத்துடன் அங்கே வானத்தில் ஒரு ஒலியும் எழுந்தது. "சொல்வளமிக்க பதிகம் பாடிய சிறப்பினால் 'நாவுக்கரசர் என்று ஏழுலகும் நின் பெயர் விளங்கும்' என்னும் திருவாக்கு எழுந்தது. எனவே அப்பருக்கு நாவுக்கரசு என்னும் திருநாமம் இறைவனால் அளிக்கப்பட்டது என்று அறிகிறோம். அன்று முதல் அவர் திருவாக்கில் தமிழ் முத்துக்கள் தோன்றின; அருட்பாடல்கள் எழுந்தன. தலங்கள் தோறும் சென்று தமிழ் மாலை சாத்தித் தம் பெருமானை வழிபட்டுத் தில்லையைக் காணும் ஆவலுடன் வரும்போது வழியிலுள்ள திருநந்தவனம் என்னும் தலத்திற்கு வாக்கின் மன்னர் வந்து சேர்ந்தார்.

நந்தவனம் நந்தவனமாகவே காட்சியளித்தது. பெயருக்கு ஏற்பப் பூஞ்சோலைகள் நிறைந்து பொலிவுடன் விளங்கியது. அங்கு குளிர்ந்த சோலைகளில் குயிலினங்கள் கூவின; மயிலினங்கள் ஆடின; பறவைகள் பாடின. கிளிகள் கொஞ்சிப் பேசுஞ் சத்தமும் கேட்டது. காணும் பொருளை எல்லாம் பரம்பொருள் மயமாகவே நாவுக்கரசர் பார்க்கிறார். அங்கு பறவையினங்கள் கூவுஞ் சத்தம் "அரகர அரகர" என்று அவர் காதில் விழுந்தனவாம்!

"நாடு செய்த நற்றவத்தால் நாவுக்கரசர் வருகிறார். வாக்கின் மன்னர் வடிவங் காணப்பெற்றது அதிசயம்" என வந்து பறவையினங்கள் ஆனந்த பரவசமாய் "அரகர" என்று பகர்கின்றன என்று சேக்கிழார் அற்புதமாய் வருணிக்கிறார்.

நீறுதிகழ் மேனியுடன் நாவுக்கரசர் வீதிவழியே இருபுறமும் உள்ள இயற்கையழகைக் கண்டு இன்பம் எய்தி தொழுத கையுடன் நடந்து செல்ல, அவரது தோற்றத்தைக் கண்டு

"அளவில் தவம் முன்பு புரிந்ததால் வருந் தொண்டர்" என்றும், 'தவப்பயனுல் தொண்டின் நிலையில் தலை நின்ருர்' என்றும் 'உயர் தமிழ் இறையோராம் இவர் வந்தனர்' என்றும் அவ்விதம் வரும் அவரது திருவடிவம் கண்டது அதிசயம்' என்றும் எண்ணிவந்து எதிரில் நின்று சோலைக்கிளிகளும் சிறு பூவையும் அரகர என்று பயின்மொழி பகர்கின்றன என்று செந்தமிழ்வல்ல சேக்கிழார் சிறப்பாகக் கூறும் செய்யுள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உயரிய சித்திரமாகும்.

"அவர்முன் பணிவொடு தொழுதங்கு அணைவுற
அணிகொம்பரின்மிசை அருகெங்கும்
தவமுன் புரிதலில் வருதொண்டெனும் நிலை
தலைநின்று உயர் தமிழ் இறையோராம்
இவர் தந்திருவடிவது கண்டதிசய மெனவந்து
எதிர் 'அரகர' என்றே
சிவமுன் பயின்மொழி பகர்கின்றன வளர்
சிறைமென் கிளியொடு சிறுபூவை"

என்ன அழகான கற்பனை. இருபுறமும் சோலைகள்! மரக்கிளைகளில் பறவைகள்! வீதி வழியே ஒரு தொண்டர் தொழுத கையுடன் வருகிருர். அவரது தோற்றத்தை மனிதர்கள் கண்டு அதிசயித்தனர் என்ருல் அதுஒரு ஆச்சரியம் அன்று. ஆனல் தலையிலும் மார்பிலும் உருத்திராக்க மாலை தரித்துக் கொண்டு தொண்டர்கள் நடுவில் அருள் ஒளி வீச அப்பர் பெருமான் வருவதை அங்குள்ள பறவையினங்கள் பார்த்துத் தமக்குள் பேசிக்கொண்டு "தமிழ் இறையோராம் இவர் திருவடிவு கண்டது அதிசயம்", என வந்து அரகர என்று பயின் மொழி பகர்கின்றன என்று வருணிக்கும் அழகு சொல்லொணுச் சிறப்பு வாய்ந்ததாகும். பக்திச் சுவை ததும்பும் பாக்களைப் பாடியவர் சேக்கிழார் என்பதற்கு இது ஒரு சிறந்த சான்று.

சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளை என்பார்கள். அதுபோல் அப்பர் பெருமானுடன் வந்த அடியவர்கள் அரகர மகாதேவா! என்று ஆரவாரிக்கும் சத்தம் கேட்டு அவ்வாறே சோலைக் கிளிகளும் சின்னஞ்சிறு பறவைகளும் அரகர அரகர என்று சொல்லிப் பழகின என்று கருதும்படியாக "பயின்மொழி பகர்கின்றன" என்று அமைந்துள்ள செய்யுள், கற்பனைக்கு ஒரு சிகரமாக இலங்குகிறது.

ஆகவே இங்கு 'உயர் தமிழ் இறையோராம் இவர் என்று அப்பர் பெருமானைச் சிறப்பித்துக் கூறியுள்ளதைச் சிந்திக்க வேண்டும். சொன்னயம் பொருணயமிகுந்த பதிகங்கள் பாடிய தமிழ்த் தொண்டரை தமிழ்த்தெய்வம் என்று சொல்வது மிகவும் பொருத்தமாகும். அப்பருக்குத் தாய்மொழி தமிழ்மொழியே. தவப்பயனாலும் திருவருளாலும் இனிய தமிழ் மறையை அவர் நமக்கு அளித்தார். அருணெறி சிறக்க அவர் பாடிய பாடல்கள் எல்லாம் அவருக்குத் தமிழ்த் தெய்வம் என்று அழைக்கும் தகுதியை அளிக்கின்றன.

"இணைகொள் ஏழெழு நூறிரு பனுவல்
ஈன்றவன் திரு நாவினுக்கரையன்"

என்று ஆரூரரும் அப்பரைப் புகழ்ந்து பாடுகிறார்.
அப்பர் பெருமானின் திருவாக்கில் எழுந்த பதிகங்கள் எல்லாம் அருள்நெறி பரப்பும் பொன்மொழிகளாக அமைந்துள்ளன.

ஞான பூசா விதி

— அம்பை சங்கரனார் —

ஞானபூசாவிதி என்னும் நூல் ஒன்று உள்ளது. நம் சைவ சமய சாத்திரம் படித்தவர்கள் அவ்வாறு படிப்பதுடன் நில்லாது செயலில் முற்பட்டுப் பயன் துய்க்கத்தக்க பேரின்பம் நல்கும் வாய்ப்பினை அருளும் நூல் இந்நூலாகும். நம் சிந்தாந்த இதழின் தொடக்க காலத்தில் இந்நூல் நம் இதழிலேயே வெளிவந்திருக்கிறது.

இற்றைக்கு 64 ஆண்டுகளுக்கு முன்னர் குரோதி வருடம் ஆவணி மாதம் இரண்டாம் பதிப்பாக ஒரு அணுவிலையில் தொழுவூர் வேலாயுத முதலியார் முதல் மகனார் தொ. வே. திருநாகேஸ்வர முதலியாரால் பார்வையிடப்பட்டுத் தம் தம்பி திரு. வே. செங்கல்வராய முதலியாரால் பதிப்பித்து இந்நூல் வெளியிடப்பட்டது.

பின்னர் சீர்காழி ப. அ. முத்துத் தாண்டவராயபிள்ளை அவர்களால் 1934 ஆம் ஆண்டு தருமபுரம் 24ஆவது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள் மகா சந்நிதானம் அவர்கள் கட்டளைப்படி அருள்திரு சட்டைநாதத் தம்பிரான் எழுதிய குறிப்புரையுடன் இந்நூல் வெளியிடப்பட்டது. இவ்விரண்டு பதிப்புகளிலும் ஞானபூசாகரணம், ஞானபூசை, ஞானதீட்சை, போசனவிதி ஆகிய நூல்களும் சேர்த்து அச்சிடப் பட்டுள்ளன. முன்னதில் சிவானந்த போதம் எனும் நூலும் பின்னதில் ஞானுநுந்தியேட்டி என்னும் நூலும் மேலுமுள்ளன.

பின்னர் 1952ஆம் ஆண்டில் உயர்திரு த. ச. மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் பரிசோதிக்கப்பெற்று ஞானபூசா விதி என்னும் நூல் மாத்திரம் திருவாவடுதுறைப் பதிப்பாக வெளிவந்துள்ளது.

இதுகாறும் தெரிந்தவற்றுள் சித்தாந்த இதழில் வெளிவந்தது போக மூன்று பதிப்புக்களே ஞானபூசாவிதி என்னும் நூலாக வெளிவந்துள்ளன.

இந்நூல்,

"ஞானநூல் தனையோதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்ருு
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞானபூசை"

(சித்தியார் சுபக்கம்—275)

என்னும் சிவஞான சித்தியார் செய்யுளின் விளக்கமேயாகும். அதை நன்முறையில் ஆசிரியர் விளக்கிச் செல்லுந் திறம் அனுபவஞானம் பெற ஆர்வமுடையார்க்கு மிகவும் உறுதுணையாயிலங்கும் என்பது ஆன்ருேர் உள்ளக்கிடக்கை.

இந்நூல் 18 திருவிருத்தங்களையுடைய சிறந்த நூலாகும். வட மொழியில் வாதுளாகமத்தில் ஞானபூசாவிதியுள்ளது. அதனைத் தமிழில் பாடிய பெருமை இந்நூலாசிரியரைச் சாரும்.

இத்தகு சிறந்த நூலை இயற்றிய ஆசிரியச் யாவர் என்பது ஆராய்ச்சிக்குரியதாயுள்ளது. பழைய பதிப்பில் ஆசிரியர் பெயர் குறிப்பிடப் பெறவேயில்லை. ஆனால் முத்துத் தாண்டராயபிள்ளை அவர்கள் பதிப்பில் இந்நூல் கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் அவர்களால் இயற்றப்பட்டதென அச்சிடப்பட்டிருக்கிறது.

ஞானபூசையாற்றும் பொழுது நம் அகச்சந்தான குரவர் நால்வரையும் புறச்சந்தான குரவர் நால்வரையும் போற்ற வேண்டும் என இந்நூல் பகர்கிறது. அகச்சந்தான குரவ ராவார் பரஞ்சோதி, சத்திய மெய்ஞ்ஞான தரிசனிகள், சனற் குமரர், திருநந்தி தேவர் என்பவராம், புறச்சந்தான குரவர் மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார் என்னும் நால்வர் என்பது யாவரும் தெரிந்ததே.

இந்நூலை உமாபதி சிவாசாரியாரே செய்திருந்தால் தம்மையும் தியானித்துக்கொள்ள வேண்டும் என்று கூறுவது முறையன்று. மேலும் புறச்சந்தான குரவர் நால்வர் எனும் வைப்பு முறை உமாபதி சிவாச்சாரியார் காலத்திற்குப் பிற்பட்டு வந்திருக்க வேண்டுமேயன்றி அவர் காலத்திலேயே அவரையும் சேர்த்து ஆன்றோர் கருதினரென்பதும் கொள்ளத்தக்க தன்றாம். ஆகவே ஞானபூசா விதியில் ஐந்தாவது பாடலில்

ஏராரும் துவாரமிது பாரித் தாண்ட
எழிற்குரவ ரெழுவரையும் மிறைஞ்சிடாயே

என்று உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் அருளிப் போந்துள்ளார்கள். இவ்வாறே பழைய பதிப்பிலும் 1952 ஆம் ஆண்டு பதிப்பிலும் உள்ளது. 1934 ஆம் ஆண்டுப் பதிப்பில் மாத்திரம் "எண்மரையும் இறைஞ்சிடாயே" என்று குறிப்பிடப் பட்டுள்ளது பிழைபாடுடையதாகும். மேலும் பிற பதிப்பாசிரியர்கள் ஆசிரியர் பெயர் குறிப்பிடாது சென்றிருக்க 1934 ஆம் ஆண்டு பதிப்பித்தவர் உமாபதி சிவாசாரியார் இயற்றிய நூல் என்றும் குறிப்பிட்டுப் பின்னர் "எண்மரையும் இறைஞ்சிடாயே" என்று திருத்தியுள்ளது முற்றிலும் பொருத்தமற்றதாகும்.

இதற்கேற்றாற்போல் எழிற்குரவர் எழுவரையும் விளக்கும் நிலையில் ஞானபூசை 6 ஆம் பாடல் கூறுகின்றது. அதுவும்

படிப்போருக்கு விளக்கம் தரத்தகா நிலையில் அங்கங்கு திருத்தம் செய்யப்பெற்று படிப்பவர்களை மயங்கச் செய்கிறது.

"விரவுமுமா பதிசிவனன் மறைஞான சம்பந்தன்
மேவுபரத் தருணந்தி மெய்கண்ட தேவன்
திருவளரும் பரஞ்சோதி சத்யமெய்ஞ்ஞான
தெரிசனிகள் பரநந்தி திருவாயி லிருபால்"

இவ்வாறு பழைய பதிப்பிலும் 1952 ஆம் ஆண்டுப் பதிப்பிலும் உள்ளது. ஆனால் 1934 ஆம் ஆண்டுப் பதிப்பில்

"திருவளரும் பரஞ்சோதி சத்யமெய்ஞ்ஞான
தெரிசனிகள் சனற்குமரன் திருநந்தியிருபால்"

என்றுள்ளது.

இவ்விருதிருத்தங்களுமே பிழைபட்டுள்ளன. உமாபதி சிவாசாரிய சுவாமிகள் தம்மை விட்டு மற்ற எழுவரையும் பாடியிருப்பாரேயன்றி அவற்றுள் தம் பெயரைச் சேர்த்திருக்க முடியுமா? முதற் பதிப்புக்காரர் அதற்காகச் சனற் குமாரர் பெயரை நீக்கிப் பதிப்பித்துள்ளார். பின் 1934 ஆம் ஆண்டுப் பதிப்புக்காரர் எண்மர் எனத் திருத்தி அதற்குத் தக்கவாறு சனற்குமாரரையும் சேர்த்துள்ளார். இவ்வாறு ஆன்றோர் அருளிச் செய்த நூல்களைத் திருத்திப் பிற்காலச் சந்ததியினருக்கு ஏற்கனவே உண்டான மயக்கம் போதாதெனப் பெருமயக்கத்துள் ளாழ்த்திச் சென்றனர் இப்பதிப்பாசிரியப் பெருமக்கள்.

"இங்கு விரவுமுமா பதிசிவனன்" என்ற தொடரை யாரோ பிற்காலத்து மாற்றிச் சேர்த்துள்ளார்கள் என்பது வெள்ளிடைமலை. ஆகவே தக்க ஆன்றோர்கள் இப்பாட்டின் உண்மையுருவம் யாதாயிருக்க வேண்டும் என்பதனை விளக்கின் சமய உலகுக்குச் சிறிது கண் திறந்த பெருமையினைப் பெறுவர்.

மேலும் ஞானதீக்ஷா விதிக் கடைசிப் பாடலில் சில நூல்களின் பெயரைக் குறிப்பிட்டு "இவைகள் யாவும் ஞானதீக்ஷை மேற்கொண்டோர் படிக்கத்தக்க சிறந்த நூல்களாம்" என அந்நூல்களின் பெயரைக் குறிப்பிடுகின்றதேயன்றி அந்நூல்களே உமாபதி சிவாசாரியார் செய்தவை என்று கொள்ளக் கூடாது. அச்செய்யுளில் குறிப்பிட்டவைக்கு மேலும் பல நூல்கள் உமாபதிசிவாச்சாரிய சுவாமிகள் பாடியுள்ளமை தேற்றம். இத்தொகுப்புள்ளிருந்து இந்த ஞானபூசை என்னும் நூல் உமா

பதி சிவாச்சாரிய சுவாமிகளால் பாடப்பட்டது என்பது தெளிவாகின்றது. ஞான பூசையும் ஞானபூசாகரணமுமே இவர் பாடியனவென அப்பாட்டின் பொருளைக் கொள்ளவேண்டும்.

மேற்கூறிப் போந்தவற்றால் இஞ்ஞான பூசாவிதி என்னும் நூல் சிறந்த சிவபூசாதுரந்தரர்களுக்குரிய அனுபவ நூல் என்றும் இது வாதுளாகமத்திலிருந்து தமிழாக்கப்பட்டதென்றும், இதனை இயற்றியவர் உமாபதி சிவாச்சாரிய சுவாமிகளே யென்றும், அதனைப் பிறழ உணர்ந்து பலர் ஒன்றிரண்டு பாக்களையே திரித்துப் பதிப்பித்துள்ளனர் என்றும் நல்லோர் உண்மைப் பாடங்கொண்டுயர்ந்தோங்கிப் பின் வருவோர்க்குத் தக்க விளக்கம் கொடுத்தல் வேண்டும் என்றும் தெரிந்தோம். இது போன்ற நூல்களைக் கூடியமட்டிலும் சமயப் பெரியோர்கள் செம்மையாக்கித் தங்கள் கால்வழிகளுக்குதவ முன்வருவார்களாக. எல்லாம் வல்ல இறையருளும் இதற்குறுதுணையாவதாக.

மதிப்புரை

"சோழீசுரர் மலைக் கோவை" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இந்நூலாசிரியர் இற்றைக்கு 334 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பிள்ளைப் பெருமாள் சிறைமீட்டான் கவிராயர் என்பவராவர். இதனை ஏட்டு வடிவத்திலிருந்து நூல் வடிவிற்குக் கொணர்ந்த பெருமை எழுமாத்தூர் வேலம்பாளையம் திருமிகு வித்துவான் வே ரா தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களைச் சாரும். இதனைச் சோழீசுரர் ஆலயத் திருப்பணிக் குழுவினர் வெளியிட்டுள்ளனர். டிம்மியளவில் 92 பக்கங்களுடன் நல்லச்சில் இப்பதிப்பு வெளிவந்துள்ளது.

மல்லசமுத்திரம் என்பதன் மரூஉமொழி மலை என்பதாகும். அது கொங்கு நாட்டிலுள்ள சிறந்த திருத்தலங்களுள் ஒன்றாகும். இருப்பினும் நால்வர் பெருமக்களின் பாடல்பெற்ற பெருமையுடைத்தாயில்லை. அங்குள்ள பெருமான் திருநாமம் சோழீசுரர் என்பது; அம்பிகையின் திருநாமம் திரிபுரசுந்தரி என்பதாகும்.

இந்நூலில் சோழீசுரப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அகப்பொருட்டுறைகள் விரவிவர நூறு கட்டளைக் கலித்துறைச் செய்யுள்கள் காணப்பெறுகின்றன. எல்லாச் சிறப்பியல்புகளையும் தன்பாற்பெற்று விளங்கும் ஒரு சிறந்த நூல் என இதனைச் சுருங்கக் கூறலாம். இக்கோ

வைக்கு 18 பக்க அளவில் பதிப்பாசிரியர் திரு. கவுண்டர் அவர்கள் ஒரு சிறந்த ஆராய்ச்சி முன்னுரை எழுதியிருப்பது மிகவும் போற்றத்தக்கதாயுள்ளது. மேலும் நூலில் காணும் செய்யுளுக்குத் துறைவிளக்கம், குறிப்புரை முதலியனவும் பதிப்பாசிரியரே மிக நன்முறையில் எழுதியுள்ளார். திரு. கவுண்டர் அவர்களிடத்துப் பழம்பெரும் ஏட்டுச் சுவடிகள் அச்சுவாகனமேறுதன பல இருப்பதாகக் காலஞ்சென்ற வித்துவான் பெ. கோவிந்த மூப்பனர் அவர்கள் கூறியதுண்டு. அவ்வாறிருக்கின் அவற்றைத் தக்கார் துணைகொண்டு தாம்வெளியிடவோ அல்லது பிறரைக் கொண்டு வெளியிட்டோ தமிழுலகுக்குப் பயன்படச் செய்யின் தமிழுலகம் திரு. கவுண்டர் அவர்களுக்கு என்றும் கடப்பாடுடையதாயிருக்கும், திரு. கவுண்டர் அவர்களுக்கு இத்தகைய பணி சிறக்க நீடிய ஆயுள் முதலியன அருள எல்லாம் வல்ல பெம்மான் அருள் சுரக்க அவனருளை வேண்டி வழுத்துகின்றோம். பொதுமக்களும் அவர்கள் வெளியீட்டை வாங்கிப் படித்து அவர்களை ஊக்கமுறுத்துவார்களாக. இந்நாலின் விலை ரூ. 1-25 தபாற் செலவு வேறு. இந்நூல் கிடைக்குமிடம்:-

வித்துவான் வே, ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்,
எ. வேலம்பாளையம் அஞ்சல்,
எழுமாத்தூர் வழி,
ஈரோடு தாலூகா

என்பதாம். அன்பர்கள் பலரும் வாங்கிப் படித்துப் பயன்பெறுவார்களாக.

(அம்பை)

ஓர் அறிவிப்பு.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தாரால் வெளியிடப்பெறும் 'சித்தாந்த' இதழில் மதிப்புரைக்கென நூல் அனுப்புவோர் இரண்டு படிகள் அனுப்பவேண்டும். ஒருபடி அனுப்பின் அது சமாஜ நூல் நிலையத்தில் சேர்த்துவிடப்பெறும; மதிப்புரை வெளிவராது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(துணையாசிரியர்)